## தேசிய செய்திகள்

**பறவைகள் மற்றும் விலங்குகளை வெப்பத்தில் இருந்து காப்பாற்ற BSF ஆனது 'டானி-பானி' என்ற முன்னெடுப்பை தொடங்கியுள்ளது.**

- இந்தியாவின் துணை ராணுவ படைகளுள் ஒன்றான எல்லைப் பாதுகாப்புப் படையானது(BSF) ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் கடும் வெயிலின் தாக்கத்திற்குள்ளான பறவைகள் மற்றும் விலங்குகளுக்கு **உணவு மற்றும் தண்ணீரை** ஏற்பாடு செய்யும் சிறப்பான முன்னெடுப்பை '**டானா-பானி**' என்ற பெயரில் தொடங்கியுள்ளது.
- எல்லைப் பகுதியில் உள்ள பறவைகள் மற்றும் விலங்குகளானது கடும் வெப்பத்தில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு இந்த முன்னெடுப்பானது நடைபெறுகிறது என BSF நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**ராணுவத்தின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ரூ.500 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- பாதுகாப்பு அமைச்சகமானது இந்திய ராணுவத்தின் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த ஜூன் 15, 2023 அன்று புதுதில்லியில் ஹைதராபாத்தை தளமாக கொண்டு இயங்கும் ஐகாம் டெலி நிறுவனத்துடன் 1,035 உபகரண கொள்முதலுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் மூலம் 1,035 அளவிலான மற்றும் 500 கோடி ரூபாய் மதிப்பிலான 5/7.5 டன் ரேடியோ ரிலே தகவல் தொடர்பு சாதன கொள்கலன்கள் வாங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**BSF-BGB இடையிலான DG மட்ட ஒத்துழைப்பு மாநாட்டில் "ஐந்து வளர்ச்சித் திட்டங்களானது" மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- ஜூன் 14 அன்று இந்தியாவின் எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) மற்றும் வங்கதேச எல்லைக் காவலர்கள் (BGB) இடையேயான 53வது தலைமை இயக்குனர் மட்டத்திலான எல்லை ஒருங்கிணைப்பு மாநாட்டில் ஐந்து மேம்பாட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இரு நாடுகளுக்கிடையேயான எல்லை பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் எல்லை தீவிரவாதத்தை குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிரான்சில் நடைபெறும் AIAF இல் இந்தியா முதல் முறையாக பங்கேற்க உள்ளது.**

- பிரான்சில் நடைபெற உள்ள இந்த ஆண்டு அன்னேசி சர்வதேச அனிமேஷன் விழாவில் (**AIAF** ) முதல் முறையாக இந்தியா பங்கேற்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இந்த திருவிழாவின் போது சரஸ்வதி யந்திரத்தின் கருப்பொருளில் வடிவமைக்கப்பட்ட இந்திய அரங்கத்தையும் அங்கு திறந்து வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விழாவானது இந்திய படைப்பாற்றலை உலகிற்கு காட்டும் ஒரு தளமாக அமையும் என தகவல் மற்றும் ஒலிபரப்பு செயலாளர் அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

**இந்தியாவின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிறுவனமானது (NTPC) ஃபோர்ப்ஸின் 2023க்கான பட்டியலில் 433 வது இடத்தைப் பிடித்துள்ளது.**

- இந்தியாவின் மிகப்பெரிய பொது மின் உற்பத்தி நிறுவனமான, நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமானது(NTPC), சர்வதேச ஃபோர்ப்ஸ் நிறுவனமானது சமீபத்தில் வெளியிட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான தி குளோபல் 2000 தரவுகளில், முந்தய இடத்தை விட 52 இடங்கள் முன்னேறி **433வது** இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த ஆண்டு பட்டியலில் 485வது இடத்தில் இந்நிறுவனமானது இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும் மற்றும் இந்த உயர்வானது உலகளாவிய சந்தையில் வலுவான சக்தியாக NTPC உருவானதைக் காட்டுகிறது என்று மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியானது இந்த ஆண்டு நாட்டின் வரலாற்றில் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.**

- இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதியின், அளவு மற்றும் மதிப்பானது 2022-23இல் நாட்டின் வரலாற்றில் இதுவரை எப்போதும் இல்லாத உச்சத்தை எட்டியுள்ளது.
- நிதியாண்டில் ரூ. 63,96,914 கோடி (USD 8.09 பில்லியன்) மதிப்புள்ள 1.7 மில்லியன் டன் அளவிலான கடல் உணவுகளை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது என்பது சமீபத்திய புள்ளியில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உயர்வானது 2021-22 ஆம் ஆண்டில் அளவு அடிப்படையில் **26.73 சதவீதமும்** மதிப்பு அடிப்படையில் **4.31 சதவீதமும்** வளர்ச்சியடைந்திருப்பது தெரிய வருகிறது.

## சர்வதேச செய்திகள்

**உலக வங்கியானது தெற்காசியாவில் தனது முதல் பிரத்யேக சாலை பாதுகாப்பு திட்டத்தை தொடங்கியுள்ளது.**

- உலக வங்கியானது தெற்காசியாவில் தனது முதல் பிரத்யேக சாலை பாதுகாப்பு திட்டத்தை வங்கதேச அரசாங்கத்துடன், டாக்காவில் ஜூன் 14 அன்று கையெழுத்திட்ட 358 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி ஒப்பந்தத்துடன் தொடங்கியுள்ளது என அறிவித்துள்ளது.
- சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தவும், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் காயங்களைக் குறைக்கவும், அதிக ஆபத்துள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டச் சாலைகளை சரி செய்வதையும் நோக்கமாக கொண்டு இந்த திட்டமானது செயல்பட உள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது.

Examsdaily

## மாநில செய்திகள்

**தெலுங்கானாவின் 5 கட்டமைப்புகளானது அழகான கட்டமைப்புக்கான சர்வதேச பசுமை ஆப்பிள் விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

- தெலுங்கானாவிலிருந்து ஐந்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளானது லண்டனை தளமாகக் கொண்ட தனியார் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்பான 'தி கிரீன் நிறுவனத்தினத்திலிருந்து நகர்ப்புற மற்றும் ரியல் எஸ்டேட் என்ற பிரிவின் கீழ் "அழகான கட்டிடங்களுக்கான சர்வதேச பசுமை ஆப்பிள் விருதுகளுக்கு" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- நாட்டிலிருந்து கட்டிடம் மற்றும் கட்டமைப்பிற்காக மதிப்புமிக்க இந்த கிரீன் ஆப்பிள் விருதுகளைப் பெறுவது இதுவே முதல் முறை என்றும், தெலுங்கானா மாநிலமானது ஐந்து விருதுகளையும் பெற்ற ஒரே மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது என்றும் அதிகாரப்பூர்வ வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிவாரி மாவட்டமானது இரண்டாவது "ஹர் கர் ஜல்" மாவட்டமாக உருவெடுத்துள்ளது.**

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள நிவாரி மாவட்டமானது மாநிலத்தின் இரண்டாவது ஹர் கர் ஜல் மாவட்டமாக மாறியுள்ளது. ஹர் கர் ஜல் என்பது ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குழாய் மூலம் தண்ணீரை வழங்கக்கூடிய திட்டமாகும், அந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி இரண்டாவது மாவட்டமாக இது உருவெடுத்துள்ளது.
- நிவாரி மாவட்டத்தில் உள்ள 253 கிராமங்களில் உள்ள அனைத்து அல்லது 55,645 வீடுகளுக்கும் 100 சதவீதம் குழாய் மூலமாக நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அம்மாநிலத்தின் **புர்ஹான்பூர்** மாவட்டமானது நாட்டின் முதல் ஹர்கர் ஜல் மாவட்டம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**எரிசக்தி மேம்பாட்டுக்காக SJVN மற்றும் MAHAGENCO இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- மாநிலத்தில் 5,000 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு திட்டங்களை உருவாக்க மகாராஷ்டிரா மாநில மின் உற்பத்தி நிறுவனத்துடன்(MAHAGENCO) மத்திய அரசுக்கு சொந்தமான நீர் மின் நிறுவனமான SJVN உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU)மேற்கொண்டுள்ளது.
- மகாராஷ்டிராவில் ஹைட்ரோ,அழுத்தப்பட்ட சேமிப்பகம், சோலார், காற்றாலை மற்றும் பச்சை ஹைட்ரஜன் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மேம்பட்ட மற்றும் புதுப்பிக்கத்தக்க திட்டங்களை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் செயல்பட உள்ளது என SJVN நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நியமனங்கள்

**சுகேஷ் போவால் - ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமனம்.**

- மோதிலால் ஓஸ்வால் குழும தேர்வு ஆணையமானது ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக "சுகேஷ் போவாலை"ஜூன் 14 அன்று நியமித்துள்ளது.
- வணிக மேலாண்மை, விற்பனை மற்றும் சில்லறை கடன் ஆகியவற்றில் 27 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட இவர் ஹோம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்த மற்றும் மேம்படுத்தவதற்கான பணிகளை மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காஷ்மீரை தளமாகக் கொண்ட சினார் படைப்பிரிவின் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் பொறுப்பேற்றுள்ளார்.**

- தந்திரோபைய காஷ்மீர் அடிப்படையிலான சீனார் படைப்பிரிவின் தலைமைப் பொறுப்பை லெப்டினன்ட் ஜெனரல் ராஜீவ் காய் ஜூன் 15 2023 அன்று ஏற்றுக்கொண்டார்.
- காஷ்மீரில் அமைதி மற்றும் மேம்பாட்டிற்காக கூட்டாக குடிமக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக தேவையான கூடுதல் நடவடிக்கைகளை இவர் மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**SECI நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக ராமேஷ்வர் பிரசாத் குப்தா நியமனம்.**

- 1987ஆம் ஆண்டு மற்றும் குஜராத் பிரிவை(CADRE) சேர்ந்த ஓய்வு பெற்ற முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியான ராமேஷ்வர் பிரசாத் குப்தா, சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக(CMD) இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நியமனத்தில் மூலம் இவர் இந்நிறுவனத்தின் குறைகளை நிவர்த்தி செய்து துறையினை மேம்படுத்துவார் என SECI நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**அசாமின் புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக அனுராக் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார்.**

- அசாமின் புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக இந்திய ஆட்சிப்பணி அதிகாரியானா அனுராக் கோயல் நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தனது அதிகாரப்பூர்வ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- முன்னனுபவம் கொண்ட இவர் அசாமில் நடைப்பெற இருக்கும் அனைத்து தேர்தல்களை திறம்படவும் நேர்மையுடனும் நடத்துவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ExamsDaily

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

**வைக்கிங் நோய் நியண்டர்தால்களிடமிருந்து பெறப்பட்ட மரபணுவிலிருந்து பெற்றிருக்கலாம் என சமீபத்திய அறிக்கையில் கண்டுபிடிப்பு.**

- வடக்கு ஐரோப்பாவில் கிட்டத்தட்ட 60 வயதிற்கு மேற்பட்ட பல ஆண்கள் மிகக்கொடூரமான வைக்கிங் நோயால் பாதிக்கப்படுகின்றனர். அதாவது இந்த நோய் ஏற்பட்டுள்ளவர்களுக்கு கை மற்றும் கால் விரல்கள் வளைந்த நிலையில் காணப்படுதல் மற்றும் அதிக கோப நிலை ஏற்படுதல் ஆகியவை அறிகுறிகளாக அமையும்.
- கரோலின்ஸ்கா பல்கைலக்கத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மூலக்கூறு உயிரியல் மற்றும் பரிணாமம் தொடர்பாக நடத்திய ஆய்வில் இந்த நோயினை பெற்றவர்களின் முன்னோர்கள் நியண்டர்தால்களிடமிருந்து மரபணுவை பெற்றிருக்கலாம் என்பதை கண்டறிந்துள்ளனர்.

## முக்கிய தினம்

**முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினம் 2023**

- மன, உடல் மற்றும் உணர்ச்சி ரீதியான வன்கொடுமை ஆகியவற்றிலிருந்து முதியோர்களை பாதுகாப்பதை நோக்கமாக கொண்டு ஒவ்வொரு ஆண்டும் முதியோர் வன்கொடுமை விழிப்புணர்வு தினமானது ஜூன் 15 அன்று அனுசரிக்கப்பதுகிறது. மேலும் இந்த தினமானது **2011** இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்ட தினமாகும்.
- வட்டத்தை மூடுதல்: முதியோர் கொள்கை, சட்டம் மற்றும் சாட்சிய அடிப்படையிலான பதில்களில் பாலின அடிப்படையிலான வன்முறையை (GBV) நிவர்த்தி செய்தல்(Closing the Circle: Addressing Gender-Based Violence (GBV) in Older Age Policy, Law, and Evidence-based Responses) என்பது இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.

Examsdaily